2014 ஜூலை 15]
139—

நியாய விலைக் கடை

***31342—திரு. ஆ. நாராயணன்:**

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதி, திருக்குறுங்குடி பேரூராட்சி, 14-வது வார்டில் புதிய நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) புதிய பகுதிநேர நியாய விலைக் கடை துவங்க அரசு வழிகாட்டுதலின்படி தாய்க் கடைக்கும் உத்தேச பகுதிநேர நியாய விலைக் கடைக்கும் இடையே ஒன்றரை கிலோ மீட்டர் தூரம் இருக்க வேண்டும் என்ற நிபந்தனை பூர்த்தியாகாத நிலையில், திருக்குறுங்குடி பேரூராட்சி 14-வது வார்டில் புதிய நியாய விலைக் கடை துவங்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி அவர்கள்.*

திரு. மு. திராவிடமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதிக்கு உட்பட்ட கூடலூர், பந்தலூர் பகுதிகளில் 1 ஆம் தேதி சென்றால்தான் பொது விநியோக முறையில் வழங்கப்படும் அத்தியாவசியப் பொருட்கள் கிடைக்கும் என்ற நிலை உள்ளது. அங்கே காலை 5 மணிக்கே பொதுமக்கள் சென்று அதிக அளவில் வரிசையில் நிற்பதால் அவர்களைக் காவல் துறையினர் கட்டுப்படுத்தக்கூடிய நிலைமை உள்ளது. அரிசி, பருப்பு, உளுந்து போன்ற பொருட்கள் எல்லாம் அனைத்து அட்டைதாரர்களுக்கும் கிடைப்பது இல்லை.*

அதேபோன்று மண்ணெண்ணெய் கடந்த தி.மு.க. ஆட்சியில் 10 லிட்டர் என்ற அளவில் சிறப்பு அடிப்படையில் நீலகிரி மாவட்டத்திற்கு வழங்கப்பட்டது. ஆனால் தற்போது 3 லிட்டர் மண்ணெண்ணெய்தான் வழங்கப்பட்டு வருகிறது. இதை மாற்றி சிறப்பு அடிப்படையில் நீலகிரி மாவட்டத்திற்கு 10 லிட்டர் மண்ணெண்ணெய் வழங்கவும், அனைத்து அட்டைதாரர்களுக்கும் அனைத்துப் பொருட்களும் கிடைக்க உத்தரவாதம் அளிக்கும் வகையிலும் அரசு நடவடிக்கை எடுக்குமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வியானது பகுதிநேரக் கடை திறப்பது சம்பந்தமானது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மூலக் கேள்விக்குத் தொடர்பில்லாத கேள்வியைக் கேட்டிருப்பதோடு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவைக்குத் தவறான தகவலைத் தெரிவிக்கின்றார். அத்தியாவசியப் பொருட்களை வழங்குவதில், இந்தியாவிலேயே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆளுகின்ற மாநிலமான தமிழ்நாடுதான் (மேசையைத் தட்டும் ஒலி) சிறப்பாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றது என மத்திய அரசால் தொடர்ந்து பாராட்டப்படக்கூடிய மாநிலமாகத் தமிழ்நாடு இருந்துகொண்டிருக்கின்றது. மைனாரிட்டி தி.மு.க. ஆட்சிக் காலத்தில் பொது விநியோகத் திட்டம் செயல்பட்டதாகவே தெரியவில்லை என்பதுதான் நிதர்சனமான உண்மை. ஆனால், அதையெல்லாம் மறைத்து இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான தகவலை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொண்டிருக்கின்றார் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 140, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. முத்துக்குமார், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.